மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகவேலு, தொழில்நுட்பக் கல்லூரி என்று கேட்டுவிட்டு, என்னவெல்லாமோ கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-50

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வியே பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான கட்டடம் பற்றியது. Polytechnic கல்லூரிகளைத்தான் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் என்று சொல்கிறோம். குறிப்பாக, தலைவர் கலைஞர் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், இந்த ஐந்தாண்டுகளில் 67 அரசுக் கலைக் கல்லூரிகளுக்கும் பல்வேறு கட்டடங்கள் கட்டுவதற்காக மட்டும் ஏறத்தாழ 50 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கி, இன்று பல கல்லூரிகளிலும் அவை உருவாக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் வைத்திருக்கிற கோரிக்கையைப்போல, அந்தக் கல்லூரிகளிலேயிருந்து, பல்கலைக்கழகத்திற்கு P.G. பட்ட மேற்படிப்பிற்கான கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டிருக்குமானால், அவற்றை நிச்சயமாகப் பரிசீலித்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

54—

ஒலி எழுப்பி

***110263—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகன ஓட்டுநர்கள் பேரிரைச்சலை ஏற்படுத்துகிற ஒலி எழுப்பிகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா?

TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காதுகளைச் செவிடாக்கும் மற்றும் பேரிரைச்சலை ஏற்படுத்தும் ஒலி எழுப்பிகளைப் பயன்படுத்தும் (music horn and air horn) இரண்டு, மூன்று, நான்கு மற்றும் இதர சக்கர வாகன ஓட்டிகளின்மீது காவல் துறையினரால் அவ்வப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை வரவேற்கிறேன். அதே சமயத்திலே, இந்தச் சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும். ஒலி மாசுபடுவது என்பது இன்றைக்கு மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. சாலையோரங்களில், வீடுகளில் இருக்கின்ற குழந்தைகள்கூட தூங்க முடியாமல் அலறுவதாலும், அதேபோன்று வயதானவர்களுக்கு அதுபோன்ற ஒலி எழுப்பான்கள் மிகவும் இடைஞ்சலாக இருப்பதாலும் அதைக் கடுமையாகத் தடுப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேவேளையில், சென்னையில் பெரும்பான்மையான சாலைகளில் இரு சக்கர வாகன நெரிசல் அதிகமாக இருப்பதால், நான்கு சக்கர வாகனங்கள் எல்லாம் போக முடியவில்லை. எனவே, அதற்காகத் தனியாக சாலைகள் அமைப்பதற்குத் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மத்திய மோட்டார் வாகன விதி 119 (2)-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதல் தடவை அவர்களைச் சரிபார்க்கும்போது, அவர்களிடமிருந்து அபராதமாக 100 ரூபாயும், இரண்டாவது முறையும் அவர்களே தவறு செய்தால் 300 ரூபாய் என்ற வகையிலேயும் அபராதம் விதித்து அந்தந்தப் பகுதிகளிலே காவல் துறையினராலும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள்மூலமாகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் எவ்வளவு வழக்குகள் பதிவு

செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரமும் இருக்கிறது. எனவே, இரண்டு துறையினரும் இணைந்து அதைச் செயல்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அடுத்ததாக, இரு சக்கர வாகனங்கள் செல்வதற்காக சாலைகளை அகலப்படுத்தித் தரமுடியுமா, அல்லது சாலைகளை ஒதுக்கமுடியுமா என்று கேட்டார். சாலைகளை அகலப்படுத்துவது அல்லது ஒதுக்குவது என்பது இப்போது இயலாத் காரியமாக இருக்கிறது. JNNURM திட்டத்தின்கீழ் நகர்ப்புர வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிய பேருந்துகளை வாங்குவதற்கு, நம்முடைய உள்ளாட்சித் துறைமூலம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதித்து, கடந்த ஆண்டு 1,500 புதிய பேருந்துகளைத் தந்தார்கள். அப்படித் தருகின்றபோது, பேருந்துகள் செல்வதற்கென்று தனி சாலை அமைத்துத் தருவதானால் அதற்காகக்கூட நிதியை ஒதுக்கித் தருவதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால், இருக்கின்ற இட நெருக்கடியிலே அதுபோல் செய்வதற்கு இயலாத காரணத்தால்தான் அது அப்படியே கைவிடப்பட்டிருக்கிறது. எனவே, வருங்காலத்தில் அதைப்பற்றி ஆய்வு செய்து, செய்ய முடியுமானால் மத்திய அரசுகூட நிதி உதவி தரத் தயாராக இருக்கிறது. சாலைகளை அகலப்படுத்துகின்றபோது வியாபாரிகளின் இடங்களை, வீடுகளையெல்லாம் எடுக்கக்கூடிய சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டுதான் அது இப்பொழுது அப்படியே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சாலைகளில் இட நெருக்கடியைப் பற்றிச் சொன்னார்கள். அண்ணா சாலை போன்ற பிரதான சாலைகளைப் பறக்கும் சாலைகளாக—எப்படி பூந்தமல்லி சாலையைப் பறக்கும் சாலையாக அமைக்கிறார்களோ—அதுபோன்ற திட்டத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ளுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

அதேபோன்று வாகனப் புகை என்பது இப்போது அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. டெல்லி போன்ற பெரு நகரங்களில் C.N.G.-யில் வாகனங்கள் இயக்கப்படுகின்றன. அதுபோன்று

2010 ஏப்ரல் 19]

ஆட்டோக்கள் இங்கேயும் இயக்கப்படுமா எனக் கேட்டு, அதுமட்டுமல்லாமல் வாகனங்களின் Head light-ல் கறுப்பு மை தடவுவது இல்லை. அமைச்சர்கூட அதற்கான கடுமையான சட்டங்கள் எல்லாம் போடுகிறோம் என்று பலமுறை சொல்லியிருக்கிறார். கறுப்பு sticker ஒட்டவில்லை. அதை ஒட்டினால் எதிர்வரும் வாகனங்களின் வெளிச்சத்தால் ஏற்படுகின்ற வாகன விபத்துகள் குறையும் என்று தகவல் சொல்லப்படுகிறது. எனவே, அதைச் செய்வதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

இரவு நேரத்தில் லாரிகளின் பின் பக்கத்தில் danger light எரிவது இல்லை. சமிக்ஞை விளக்கினையும் indicator light-உம் side-இல் போகும்போது போடுவதில்லை. இதையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். அதுபோல பெரிய பெரிய வாகனங்கள் செல்கிறபோது வாகன அளவைவிட வெளியே கம்பிகள் நீட்டிக்கொண்டு செல்கின்றன. அதற்கு danger அடையாளம் பொருத்துவது இல்லை. இவ்வாறு இருப்பதால் விபத்துகள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் தடுப்பதற்கு அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பறக்கும் சாலை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மேயராக இருந்தபோதுதான், சென்னை மாநகரத்திலே புதிய பாலங்களை, இன்றைக்கு எல்லோரும் பாராட்டுகின்ற வகையிலே அந்தப் பாலங்களை அமைத்து (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்தை நேர் செய்திருக்கிறார்கள். இரண்டாவது, danger light. வாகனங்கள் F.C.-க்கு வருகின்றபோது, Fitness Certificate வாங்க வருகின்றபோது அவையெல்லாம் சரியாக இருந்தால்தான், நாம் அதை வழங்கிக் கொண்டிருக்கிறோம். இடையிடையே Patrol-சாலையிலே இருக்கின்ற போலீஸ்காரர்கள், அதையும் கண்டறிந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். வாகனப் பெருக்கத்தில் இன்றைக்கு இந்தியாவிலேயே மிக அதிகமாக உள்ள 2-வது மாநிலம் நம்முடைய மாநிலம்தான். எனவே, அதற்குத்

[2010 ஏப்ரல் 19

தேவையான ஆட்களை நம்முடைய முதலமைச்சர் இந்த முறை கிட்டதட்ட 700 புதிய ஆட்களை நம்முடைய துறைக்கு வழங்கி இருக்கிறார்கள். எனவே, ஆட்களும் நியமிக்கப்படுகிறார்கள். அலுவலகமும் புதிதாகத் திறக்கப்படுகிறது. கட்டுப்பாடுகளையும் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முற்பகல் 9-55

C.N.G.-யில் இயங்கும் ஆட்டோக்களை விடமுடியுமா என்று கேட்கிறார். முதலிலே, சென்னை மாநகரத்திலே ஆட்டோக்கள் அத்தனையும் Gas-லே ஓட வேண்டுமென்பதற்காக, ஆட்டோ ஒன்றுக்கு 25,000 ரூபாய் மானியம் தந்து, அந்த மானியத்திலே முன்னுரிமை அடிப்படையிலே, யார் முதலில் வந்தார்கள் என்று இல்லை, அவருடைய தகுதிக்கேற்ப அவர்களுக்கு ஆட்டோ வழங்கப்பட்டது. 1,000, 1,500 ஆட்டோக்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த Gas Agency வைத்திருக்கிற பெட்ரோல் நிலையங்கள் 17, 18—தான் இருக்கின்றன. எனவே, அவர்களுக்கு அந்த Gas வருவதிலே தாமதம் ஆகிறது. பொதுமக்கள், ஆட்டோ ஓட்டுனர்கள் இதிலே அதிகமான ஆர்வம் காட்டவில்லை. டெல்லியில் பேருந்துகளை இயக்குகிறார்கள் என்று சொன்னால், அங்கே Gas அருகிலே கிடைக்கிறது. குஜராத் மாநிலத்திலிருந்து அவர்கள் கொண்டு வருகிறார்கள். இப்போது நாம் மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து அதை பைப்லைன்மூலம் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால் கிட்டதட்ட ரூபாய் 3,000, 3,500 கோடி அளவிலே செலவு செய்யக்கூடிய நிலை வந்தால்தான் நமக்கு Gas கிடைக்கும். எனவே, அப்படி வருகின்றபோதுதான் அதைப் பற்றி சிந்திக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.